பணி நிரந்தரப்படுத்தப்படாத பட்டதாரி ஆசிரியர்கள்.

*470, வின—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்பட்டு, இன்னும் நிரந்தரம் ஆக்கப்படாத பட்டதாரி ஆசிரியர்களின் தொகை என்ன ?

(ஆ) அவர்களுக்குப் பிரத்யேகமாக T.N.P.S.C. மூலம் தேர்வு வைத்து பணியில் நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ஆம் தேதிவரை அரசினர் 'பி' பிரிவு பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 702 பேர்கள், ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 250 பேர்கள். மொத்தம் 952 பட்டதாரி ஆசிரியர்கள்.

(ஆ) ஆம். இவர்களது பணியினை வரன்முறைப்படுத்த தேர்வாணைக்குழு தனியாக ஒரு நியமனத் தேர்வு நடத்த அரசு தனது ஆணை (நிலை) எண். 2683 கல்வி நாள், 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் நாளில் ஆணை வெளியிட்டுள்ளது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்கள் எல்லாம் எத்தனை ஆண்டுகளில் நிரந்தரமாக்கப் படுவார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தேர்வு ஆணைக்குழுவின் முடிவு தெரிந்தவுடன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : இப்படிப்பட்ட ஆசிரியர்கள் பள்ளிகளில் 5 ஆண்டுகள், 7 ஆண்டுகள் காலமாகவும், கல்லூரி களில் ஐந்து ஆண்டு, ஏழு ஆண்டுகள் காலமாகவும் இப்படி தற்காலிகமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறுர்கள். இவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறுர்கள். இவர்களை நிரந்தரமாக்குவதற்கு தேர்வு ஆணைக் குழுவின் முடிவை எதிர்பார்க்காமல், இவர்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படுவதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு பணிகளில் உள்ளவர்களை நிரந்தரமான ஊழியர்களாக நியமிப்பது தேர்வு ஆணைக் குழுவின் முடிவுபடிதான். அது சட்டம், விதி. அதற்கு முரணுக இந்த அரசு நடக்க முடியாது.

1978 மார்ச் 9]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலுள்ள மானேஜ்மென்டார் நினைத்தால் எந்த நேரத்திலும் இவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடக்கூடிய வசதி இருக்கிறது. ஆகவே இவர்களை நிரந்தரமாக்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எப்போது நிரந்தரமாக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. இருந்தாலும் எல்லா பட்டதாரிகளும் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தான் நான் பதில் தந்திருக்கின்றேன். எல்லோரையும் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

Polytechnic in Dharmapuri district.

*471 Q. Dr. K. SAMARASAM, Thiru M. ANNAMALAI ; Will the Hon. the Minister for Education be pleased to state whether the feasibility of starting a new Polytechnic in Dharmapuri district has been examined ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். தர்மபுரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஒன்றினைத் துவக்குவதற்கான ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9.50.]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பல்தொழில் பயிற்சிக் கல்லூரி தொடங்க வேண்டுமென்பது நீண்ட நாட்களாக கோரிக்கை. இதுபற்றி அண்மையில் பரிசீலிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. அது எப்போது நிறைவேற்றப்படும் ? அதற்கான முயற்சியில் அரசு எந்த அளவிற்கு ஈடுபட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பரிசீலனை முடிந்தவுடன், அதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS